தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆனி 26, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 ஜூலை 10, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால் அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கோ. பூவராகன் அவர்கள் 23—2—2014 அன்றும், திரு. அ. வைரமன்னன் அவர்கள் 13—5—2014 அன்றும், திரு. ரா. சோமநாத் அவர்கள் 31—5—2014 அன்றும், திரு. இராம. நாராயணன் அவர்கள் 22—6—2014 அன்றும் மற்றும் திரு. எஸ். ராஜூ அவர்கள் 6—7—2014 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கோ. பூவராகன் அவர்கள் 1962 முதல் 1967 வரையிலும், 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1989 முதல் 1991 வரையிலும் மூன்று முறை விருத்தாசலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான

முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1962 முதல் 1967 வரை தமிழக அமைச்சராகவும், 1971 முதல் 1977 வரையிலும் மற்றும் 1977 முதல் 1979 வரையிலும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. அ. மலர்மன்னன் அவர்கள் 1985 முதல் 1988 வரையிலும் மற்றும் 1989 முதல் 1991 வரையிலும் இரண்டு முறை திருச்சிராப்பள்ளி-1 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. ரா. உமாநாத் அவர்கள் 1977 முதல் 1980 வரையிலும் மற்றும் 1980 முதல் 1984 வரையிலும் இரண்டு முறை நாகப்பட்டினம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1962 முதல் 1967 வரையிலும் மற்றும் 1967 முதல் 1970 வரையிலும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. இராம. நாராயணன் அவர்கள் 1989 முதல் 1991 வரை காரைக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. என். ராஜு அவர்கள் 1996 முதல் 2001 வரை பொள்ளாச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புடன் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தலைவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)